# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1489/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | அறிவுச்செல்வி | க–பெ | குமார் |
| ஊர்: | : | மானகிரி | சமயம்: | |
| வயது: | : | 35/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | வழக்கறிஞர் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.06.2025**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

<u>மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை.</u>

நான் எனது கோரிக்கைக்கு ஆதரவாக கீழ் கண்ட ஆவணங்களை நீதிமன்ற அனுமதியுடன் கூடுதல் ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன். மனு படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

1) எனது தகப்பனார் இறந்து போன போது எடுத்த புகைப்படம் நகல் **ம.சா.ஆ.15**
2) 05.03.2017 தேதியிட்ட எனது தகப்பனார் திருநாவுக்கரசுக்கு எதிரி காவல் ஆய்வாளராக இருந்த போது அனுப்பிய அழைப்பானை ஒப்புதல் அட்டை **ம.சா.ஆ.16** (எதிரி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)
3) மனுதாரர் மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P(MD) No. 17919 of 2019 என்ற வழக்கில் தாக்கல் செய்த எதிருரை **ம.சா.ஆ.17**.
4) எனது தகப்பனாரில் மறுஉடல் கூறாய்வு அறிக்கை **ம.சா.ஆ.18.**

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிர்மனுதாரர் மீது என்ன காரணத்திற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2017 மார்ச் மாதம் என்னுடைய தகப்பனார் காவல் நிலைய விசாரணைக்கு ஆஜர் ஆகாதாதல் நான் ஆஜர் ஆகி காவல் ஆய்வாளர் முன்னிலையில் எனது தகப்பனார் குடும்ப சூழ்நிலை காரணமாக மனநிலை பாதிக்கப்பட்டு உயர் அதிகாரிகளான முதல் அமைச்சர் தனிப்பிரிவு மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு மனு அளித்து வருவதாகவும் அதற்கு எந்த மேல் நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்று கூறி நான் வாக்குமூலம் அளித்ததாக போலியான ஆவணத்தை எதிரி உற்பத்தி செய்துள்ளார் அதனை எதிரித்து மேற்படி வழக்கினை தாக்கல் செய்துள்ளேன்.

ம.சா.ஆ.15 புகைப்படங்களுக்கும் இந்த வழக்கிற்கும் என்ன சம்மந்தம் என்றால் எனது தந்தையின் இறப்பின் போது இருந்த நிலையை நீதிமன்றத்திற்கு காட்டும் விதமாக தாக்கல் செய்துள்ளேன். எனது தகப்பானர் எந்த ஆண்டில் இறந்தார் என்றால்

12.08.2019 அன்று இறந்தார். நான் 2017 ஆவணம் தொடர்பாக புகார் கொடுத்து விட்டு தற்பொழுது எனது தந்தை 2019 ஆண்டு இறந்த புகைப்படத்தை தாக்கல் செய்வது இவ்வழக்கிற்கு முற்றிலும் தொடர்பற்ற காரணி என்றால் சரியல்ல எனது தகப்பனார் இறப்பின் பொழுது இருந்த நிலை மற்றும் இறப்பிற்கான காரண அறிக்கை முற்றிலும் வேறுபாடாக உள்ளதால் தாக்கல் செய்துள்ளேன்.

நான் தாக்கல் செய்துள்ள புகாரில் எனது வாக்குமூலமான மார்ச் 2017 போலீயாக உருவாக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் பொதுவாக போலி ஆவணம் என்று குறிப்பிட்டுள்ளேன் வருடமோ மாதமோ குறிப்பிடவில்லை. எந்த ஆவணம் போலீயாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடாமல் புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது ஏற்க்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல நான் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் பெற்ற ஆவணத்தின் அடிப்படையில் மேற்படி ஆவணம் போலி என குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளேன்.

ம.சா.ஆ.16 ல் உள்ள காவல் ஆய்வாளர் என்ற இடத்தில் யார் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் எதிரி தான் கையொப்பம் செய்துள்ளார். ம.சா.ஆ.16 உள்ள ஆய்வாளர் கையெழுத்தும் ம.சா.ஆ.3 க்கும் உள்ள ஆய்வாளர் கையெழுத்தில் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான் ஆனால் ம.சா.ஆ.16 ஆவணத்தின் அடிப்படையில் தான் இந்த வழக்கின் போலி ஆவணம் உருவாக்கப்பட்டுள்ளது. ம.சா.ஆ.16 ஆவணத்தின் காவல் ஆய்வாளர் கையெழுத்து எதிரியின் கையெழுத்து என்று நான் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் ம.சா.ஆ.3 ல் உள்ள கையெழுத்து வேறு என்று ஒப்புக்கொண்ட நிலையில் ம.சா.ஆ.3 ஆவணம் எதிரி போலியாக உற்பத்தி செய்யவில்லை என்று தெரியவருகிறது என்றால் சரியல்ல.

போலியான ஆவணம் என்று சொல்லக்கூடிய ம.சா.ஆ.3 ஆனது தயார் செய்த காலத்தில் இந்த வழக்கின் எதிரி கல்லல் காவல் ஆய்வாளராக பணி செய்ய வில்லை என்றால் சரியல்ல அவர் தான் பணியில் இருந்தார். போலியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணத்தில் உள்ள கையொப்பம் யாருடையது என்று தெரியாத நிலையில் எதிரியை வழக்கில் சேர்க்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ம.சா.ஆ.3 ல் தேதி எதுவும் குறிப்பிடபடாததால் அதை வைத்து எதிரி வழகக்கில் இருந்து தப்பிக்கப்பார்க்கிறார். ம.சா.ஆ.3 ஆவணம் தயாரிக்கப்பட்ட போது அப்போது இருந்த காவல் ஆய்வாளர் தான் கையொப்பம் செய்தார் என்பதற்கான ஆதாரம் இந்த நீதிமன்ற கோப்பில் உள்ளது அதை வைத்து மேற்படி ஆவணத்தில் எதிரி கையொப்பம் செய்யவில்லை என்பதை நிரூபணம் செய்ய தயாராக உள்ளோம் என்றால் சரியல்ல.

ம.சா.ஆ 3 ல் உள்ள கையொப்பம் எதிரியுடையது இல்லை என்று ஒப்புக்கொண்டுள்ள நிலையில் எவ்வாறு நான் அவரை எதிரியாக சேர்த்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 08.02.2018 அன்று நான் எனது மூத்த வழக்கறிஞர் அறிவுரையின் படி கல்லல் காவல் நிலையத்திற்கு சென்ற போது எனது புகாரை வாங்க மறுத்து எனது தந்தை அடுத்தவர்கள் மீது பொய் புகார் அளிப்பது பணியாக கொண்டுள்ளார் என்றும் அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று என்னை வாக்குமூலம் எழுதி தர சொல்லி எதிரி தான் கட்டாயப்படுத்தினார். ஆனால் நான் அவ்வாறு எழுதி தராமல் வந்து விட்டேன். அவ்வாறு எழுதி தர சொல்லி எதிரி என்னை மிரட்டியதாக நான் எனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

ம.சா.ஆ.17 ஆவணத்தை எதிரி தான் தயார் செய்ததாக குறிப்பிட்டுள்ளதா என்றால் இல்லை. ம.சா.ஆ 17 ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.18 ஆவணத்திற்கும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் ஏதாவது சம்மந்தம் உள்ளதா என்றால் சம்மந்தம் உள்ளது. ம.சா.ஆ.18 மருத்துவரால் வழங்கப்பட்ட ஆவணம் அதற்கும் எதிரிக்கும் எந்தத சம்மந்தமும் ஆகையால் அது அவரை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள கையெழுத்து அப்போதைய ஆய்வாளர் முகமது பரக்கத்துல்லா என்பவரின் கையெழுத்து என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

ம.சா.ஆ 3 ஆவணத்தில் உள்ள காவல் ஆய்வாளர் கையெழுத்து பற்றி தெரியாது என்று கூறியுள்ள நிலையில் எதிரியை இந்த வழக்கில் சேர்த்தது சட்டவிரோதம் என்றால் சரியல்ல. எதிரியை பழிவாங்க வேண்டும் என்று கெட்ட எண்ணத்தல் யார் இந்த ஆவணத்தி தயார் செய்தார்கள் என்று தெரியாமல் எதிரியின் மீது பொய் புகார் கொடுத்து மன உளைச்சலுக்கு ஆளாக்கி கடந்த 2021 முதல் இன்று வரை துன்புறுத்தியதற்கு நீங்களே பொருப்பு அதற்கான இழப்பீடை வழங்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.06.19 10:06:39 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி